**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.56/2020**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.2** |
| **Name** | **:** | **திருமதி. காமாட்சி** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.10.2022.**

**முதல் விசாரணை -**

**நான் எட்டிவாடி கிராமத்தில் குடியிருக்கிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். இறந்துபோன கண்ணன் என்னுடைய கணவர். அ.சா.1 என்னுடைய மகன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் கணவர் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். 15.6.2019 அன்று இரவு 8.30 மணிக்கு தடம் சம்பந்தமாக பிரச்சனை நடந்தது. எங்கள் கழனி வழியாக தான் எதிரி எந்த வேலையினாலும் செல்லவேண்டும். அதனால் எங்களுக்குள் தடம் சம்பந்தமாக எப்போதுமே பிரச்சனை உண்டு.**

**எங்கள் இடத்தை ஒட்டி ரயில்வே பணி நடந்துக்கொண்டு இருந்தது. அவர்களுக்கு நாங்கள் எங்கள் இடத்தை விட்டு இருந்தோம். ரயில்வே**

பணியில் இருந்தவர்கள் எதிரியின் நிலத்தில் சிறுநீர் கழித்துவிட்டார்கள். அதற்காக எதிரி காது கொடுத்து கேட்காத அளவுக்கு அசிங்கமாக எங்களை பேசிக்கொண்டு இருந்தார். அதற்காக நான் என் கணவர், என் மகன் அ.சா.1 ஆகியோர் எதிரியை கேட்க சென்றோம்.

நாங்கள் கேட்டுக்கொண்டு இருக்கும்போதே எதிரி கோல் எடுத்து வந்து என் பையன் தலையில் போட்டுவிட்டார். அதனால் அந்த கோல் பீஸ் பீஸாகி விட்டது. அதை பார்த்து என் கணவர் ஏன் என் பையனை அடிக்கிறாய் என்று கேட்டதற்கு உடைந்த பீஸில் ஒன்றை எடுத்து வந்த என் கணவரின் இடது மார்பில் குத்திவிட்டார். என் அப்பனை ஏன் அடித்துவிட்டாய் என்று என் மகன் எழுந்து எதிரியை கேட்டுக்கொண்டே விழுந்த பீஸில் ஒன்றை எடுத்து எதிரியை அடித்துவிட்டார்.

என் அண்ணன் சேகர் சம்பவம் நடந்துக்கொண்டு இருக்கும்போதே வந்துக்கொண்டு இருந்தார். வள்ளிக்கண்ணனும் வந்துவிட்டார். என் கணவர் அங்கேயே இறந்துவிட்டார். என் மகனுக்கு சம்பவத்தில் மண்டையில் அடிப்பட்டு ரத்தமாக வந்தது. அதனால் என் அண்ணன் சேகர் என் மகனை வடமாதிமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். என்னுடைய மகன் மருத்துவமனையில் இருந்து களம்பூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்.

நானும் வள்ளிக்கண்ணனும் அந்த இடத்திலேயே அழுதுக்கொண்டு இருந்தோம். பொது மக்கள் வந்தார்கள். அதன்பிறகு போலிசார் வந்தார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் ஆம்புலன்ஸ் மூலம் பிரேதத்தை எடுத்துச் சென்றார்கள். நான் பிரேதத்துடன் செல்லவில்லை.

இரண்டாம் நாள் மதியம் பிரேதம் வீட்டிற்கு வந்தது. பிறகு அடக்கம் செய்தோம். என் கணவரையும் என் மகனையும் அடிக்க பயன்படுத்திய தேக்கு கொம்பை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். சின்னகொம்பால் ( சான்று பொருள்-1 ) தான் என் கணவரை குத்தினார். பெரிய கொம்பால் என் மகனை அடித்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எட்டிவாடி கிராமத்தில் எங்களுக்கு ஒரு வீடு உள்ளது என்றால் சரி தான். தஞ்சியம்மன் கோயிலுக்கு போகும் ரோட்டிற்கு இரண்டு பக்கமும் எங்களுக்கு நிலம் உள்ளது என்றால் சரி தான். கோயில் போகும் சாலையில் இடது பக்க இடத்தை ஒட்டியுள்ள எங்கள் நிலத்திற்கு பிறகு எதிரியின் நிலம் உள்ளது என்றால் சரி தான். எங்கள் இடது பக்க நிலத்தை தான் ரயில்வே பாதாள பாலம் கட்டுவதற்கு போக வர வழிக்கு வாடகைக்கு விட்டிருந்தோம் என்றால் சரி தான். அந்த வழியில் பொது மக்களும் போக வருவதற்கு நாங்கள் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரி தான்.

சம்பவம் நடப்பதற்கு 2,3 மாதங்களுக்கு முன்பே ரயில்வே பாதாள பணிக்கு பணிகள் தொடங்கப்பட்டது என்றால் சரி தான். ரயில்வே பணிக்காக ஒப்பந்ததாரர்கள் கண்டெய்னர் வைத்து பொருட்கள் வைப்பதற்காகவும், வேலை செய்யும் நபர்கள் தங்குவதற்கு கூடாரமும் போட்டு அவற்றிற்கு காவலுக்காக என் கணவரையும் அய்யப்பனையும் பணியமர்த்தியிருந்தார்கள் என்றால் சரி தான்.

ரயில்வேயிற்கு விடப்பட்ட நிலத்திற்கு பக்கத்தில் எங்கள் நிலம்,

வைக்கோல் போர் இடம், அதன்பிறகு மாடு கட்டும் இடம் அதன்பிறகு எதிரியின் வீடு என்றால் சரி தான். தஞ்சியம்மன் கோயிலுக்கு போகும் வளைவிற்கு பிறகு இடது புறத்தில் பாதையானது வறட்டு குளத்திற்கு செல்கிறது என்றால் சரி தான். அந்த வறட்டு குளத்திற்கு மேல்புறம் யாருடைய நிலம் உள்ளது என்றால் ஏழுமலை, அய்யப்பன் பிறகு எதிரியின் நிலம் உள்ளது.

என் அண்ணன் சேகர். அவருடைய வீடு எங்கள் வீட்டில் இருந்து தஞ்சியம்மன் கோயிலுக்கு போகும் பாதையில் ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் கூப்பிடும் தூரத்தில் உள்ளது. எங்கள் வீட்டில் இருந்து பார்த்தால் சேகர் வீடு தெரியாது என்றால் தெரியும். சேகர் வீடு ஒரு கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அய்யப்பன் வீடு சேகர் வீட்டிற்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரி தான். பன்னீர் என்பவர் என் உறவினர். அவருடைய வீடு ரயில்வே ரோட்டிற்கு மேல்புறமாக கால் பர்லாங்கு தூரத்தில் உள்ளது என்றால் சரி தான்.

எதிரியின் மனைவி பவானிக்கு காயம்பட்டதா என்றால் காயம்படவில்லை. எதிரி மற்றும் அவருடைய மனைவிக்கு காயம் ஏற்பட்டு எங்கள் மீது வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சும்மா சொல்கிறார்கள். என் மகனும் சேகரும் மருத்துவமனைக்கு சென்ற அரைமணி நேரத்தில் போலிசார் வந்துவிட்டார்களா என்றால் வந்துவிட்டார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் சரி தான். நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்களா என்றால் எழுதிக்கொண்டார்கள். போலிசார்

எழுதியதில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் கையொப்பம் போடவில்லை. அங்குள்ளவர்களை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். விசாரணை செய்ததற்கு ஆதாரமாக தனித்தனியாக எழுதிக்கொண்டார்கள் என்றால் சரி தான்.

வள்ளிக்கண்ணுவை விசாரணை செய்து கையொப்பம் பெற்றார்களா என்றால் வள்ளிக்கண்ணு கையொப்பம் போட்டார். நான் களம்பூர் காவல்நிலையத்திற்கோ, ஆரணிக்கோ செல்லவில்லை என்றால் சரி தான். நான் என் கணவரின் பிரேதம் வரும் வரை வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரி தான். எட்டிவாடி கிராமத்தில் உள்ள வீட்டில் தான் நான் என் மகன் கூட்டுக்குடும்பமாக வசிக்கிறோம் என்றால் சரி தான். எட்டிவாடி கிராமத்தில் இருந்து தஞ்சியம்மன் கோயில் செல்லும் பாதையில் உள்ள வீட்டிற்கு சுமார் 4 கிலோமீட்டர் தொலைவு என்றால் சரி தான். மாட்டிற்கு பால் கறந்து ஊற்றுவது எல்லாம் எட்டிவாடி கிராமத்தில் தான் என்றால் சரி தான்.

வயல்வேலைக்கு மட்டும் தான் வருவோம், மற்ற நேரங்களில் எல்லாம் எட்டிவாடி கிராமத்தில் தான் என்றால் நாங்கள் வயல்வெளியில் தான் இருக்கிறோம். வழக்கிற்காக வயல்வெளியில் இருப்பதாக பொய் சொல்கிறேன் என்றாலும், எட்டிவாடி கிராம வீட்டில் தான் இருக்கிறோம் என்றாலும் சரியல்ல. ரோட்டிற்கு இடது பக்கம் உள்ள நிலம் ஒரு ஏக்கர் என்றால் சரி தான். அந்த ரோட்டில் இருந்து 50 அடி கடந்து வந்து வீட்டிற்கு வரவேண்டும் என்றால் முன்பே உள்ளது. இரண்டு ஏக்கர் இடத்தின் கடைசியில் வீடு உள்ளது என்றால் சரி தான்.

ஒரு ஏக்கர் நிலம் முடிவில் தான் ரயில்வே ரோடு உள்ளது என்றால் சரி

தான். எங்கள் வீட்டில் இருந்து சம்பவ இடத்திற்கு வரவேண்டும் என்றால் ரோட்டை கடந்து ஒரு ஏக்கர் நிலத்தை கடந்து தான் வரவேண்டும் என்றால் சரி தான். சம்பவம் சுமார் ஒரு மணி நேரம் நடந்திருக்குமா என்றால் 8ல் இருந்து 8.30 மணிக்குள் தான் நடந்திருக்கும். என் கணவரை நான் தூக்கி பார்த்தேன் என்றால் சரி தான். ரத்தம் வடிந்திருந்தது என்றால் சரி தான். என் கணவருக்கு தண்ணீர் எல்லாம் கொடுத்து பேசினேனா என்றால் அப்பவே உயிர் போய்விட்டது, தண்ணீர் கொடுத்து என்ன ஆக போகிறது. என் ஆடைகளில் ரத்த கறையானதா என்றால் ஆனது. என்னுடைய ஆடைகளை போலிசார் என்னிடம் கேட்டார்களா என்றால் கேட்கவில்லை. நானும் கொடுக்கவில்லை என்றால் சரி தான்.

நான் தகவல் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் நான் என் மகன், என் கணவர் மூவரும் கும்பலாக தான் சென்றோம். என் கணவர் ரயில்வேக்காக விட்ட தடத்தில் யார் வேண்டுமானாலும் போகலாம் வரலாம் ஆனால் எதிரி தஞ்சியப்பன் போனால் மட்டும் திட்டுவார் என்றால் அப்படி எல்லாம் திட்டமாட்டார். வழக்கமாக வறட்டு குட்டை பக்கமாக செல்லும் எதிரி அன்று நாங்கள் விட்ட தடம் வழியாக சென்றார் என்றால் எதிரி சென்றார், ஆனால் நாங்கள் யாரும் அதற்கு கேட்கவில்லை. கண்டெய்னர் இடம் தவிர ரயில்வே பணிக்கான பொருட்களை நாங்கள் வாடகைக்கு விடப்பட்ட தடத்திலும் போட்டிருந்தார்கள் என்றால் சரி தான்.

எதிரி வீட்டிற்கு அருகில் சென்று தான் நாங்கள் போய் கேட்டோம் என்றால் எங்கள் நிலத்தில் இருந்துக்கொண்டே தான் கேட்டோம். எதிரி அவருடைய வீட்டில் இருந்து தான் சத்தம் போட்டார் என்றால் எங்கள்

நிலத்தில் சம்பவ இடத்திற்கு மூலையில் இருந்து சத்தம் போட்டார். எதிரியின் நிலத்திற்கு பக்கத்தில் உள்ள எங்கள் நிலத்தில் தான் சம்பவம் நடந்தது.

என் கணவரும், என் மகனும் ஏன்டா இந்த பக்கம் போனாய் என்று சொல்லி எதிரியையும் அவருடைய மனைவியையும் எதிரியின் வீட்டிற்கு அருகில் சென்று அடித்தார்கள் என்றால் அடிக்கவேயில்லை. அவ்வாறு அடிக்கும்போது ஏன் எதிரி மட்டும் போனால் அடிக்கிறீர்கள் என்று அக்கம் பக்கத்தில் இருந்தவர்களும் ரயில்வே பணியை செய்தவர்களும் தடுத்தார்கள் என்றால் யாரும் தடுக்கவில்லை. அவ்வாறு விலக்கிவிடும்போது என் மகனுக்கும் என் கணவருக்கும் காயங்கள் ஏற்பட்டது என்றால் யாரும் விலக்கிவிடவில்லை. அதனால் அடிப்படவும் இல்லை. எதிரி அடித்ததால் தான் காயங்கள்.

நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றாலும், சம்பவத்தை நான் பார்க்கவில்லையென்றால் சம்பவம் நடக்கும்போது நான் தான் கூட இருந்தேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு எதிரி என் மகனையும் என் கணவரையும் அடிக்கவும் இல்லை, திட்டவும் இல்லை என்றால் சரியல்ல. தடம் சம்பந்தமாக எங்களுக்கும் எதிரிக்கும் பிரச்சனை இருந்தது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. போலிசார் சொல்லிக்கொடுத்து சான்று பொருட்களை நான் அடையாளம் காட்டினேன் என்றால் யாரும் எனக்கு சொல்லவில்லை.

என் கணவரின் இறப்பிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் எதிரியின் வீட்டிடம் துராக்கிரமமாக என் கணவரும் என் மகனும் சென்று எதிரியையும் அவர் மனைவியையும் தாக்கியதால் அக்கம்பக்கத்தினர்

**மற்றும் ரயில்வே பணியாளர்களும் தள்ளிவிட்டதில் ஏற்பட்ட காயம் என்றால் எதிரி வீட்டிடமே நாங்கள் செல்லவேயில்லை. அடிக்கவும் இல்லை. வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.